International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# குடியேறிய தமிழர்களும்; குறிஞ்சி நிலக் கடவுளும்

(LORD MURUGA: THE SOUL OF TAMIL HERITAGE IN THE GLOBAL DIASPORA)

PROF. PARAMASIVAM MUTHUSAMY
INTI INTERNATIONAL UNIVERSITY
NILAI, MALAYSIA

**கட்டுரைச் சாரம்**

பல்வேறு காரணங்களுக்காக தமிழர்கள் பல நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். அவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்கள் மொழி, சமயம், பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றின் கூறுகளை இன்றளவும் சிதையாமல் பாதுகாத்து வருகின்றனர். தங்கள் வாழும் நாடுகளில் சிறுபான்மையினராக வாழ்ந்து வந்தாலும் கூட தங்களின் அடையாளமான மொழி, கலாச்சாரம், சமயம், பண்பாடு ஆகியவற்றை காத்து வருகின்றனர். இதற்கு சான்றாக குறிஞ்சி கடவுளான முருகனைத் தங்கள் வாழும் நாட்டில் குன்றின் மீது எங்கும் அமைத்து வழிபட்டு வருகின்றனர். முருகனை குறிஞ்சி கடவுள் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன, புலம்பெயர்ந்த தமிழர்களும் இன்று வரை முருகனைத் தமிழ்க் கடவுளாகவே வழிபட்டு வருகின்றனர். முருக வழிபாடு என்பது தொன்மை மிகு வழிபாடாக தமிழர்களின் வாழ்வியல் முறையோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்கள் வாழும் பகுதிகளில் குன்றின் மேல் அமைந்த குமரன் என்ற சொல்லுக்கேற்ப குன்றின் மீதெங்கும் முருகனுக்குக் கோயிலைக் கட்டியுள்ளனர். இதற்குச் சான்றாக மலேசியா பத்துமலை முருகன் கோயில், பினாங்கு, ஜார்ஜ் டவுன் அருள்மிகு பாலதண்டாயுதபாணி கோவில் (தண்ணீர் மலைக் கோயில்), ஈப்போ பேராக் கல்லுமலை அருள்மிகு ஸ்ரீ சுப்ரமணியர் ஆலயம், மொரிசியஸ் காட் போர்னஸ் முருகன் மலைக் கோவில், மோரோஸ் முருகன் மலைக்கோவில், தென் ஆப்பிரிக்கா டர்பன் மற்றும் ரீயூனியன் தீவில் முருகன் மலைக் கோவில்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தமிழர்கள் புலம்பெயர்ந்த சில நாடுகளில் தமிழ் மொழியானது தற்போது பேச்சு வழக்கில் இல்லை என்றாலும் முருக வழிபாட்டின் மூலமாக தமிழர்கள் தமிழையும், தமிழர் பண்பாடு கலாச்சாரம் போன்றவற்றையும் போற்றிப் பேணிக்காத்து வருகின்றனர். தமிழர்களின் வாழ்வியல் முறையில் தமிழ் மொழியும் முருக வழிபாடும் (தைப்பூசம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம் போன்றவை) பண்பாடு, கலாச்சாரத்தினூடே கலந்துள்ளது என்று கூறினால் மிகையாகாது.

**முன்னுரை**

இன்று, ஐம்பதற்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழர்கள் குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

சங்க காலம் தொட்டே தமிழர்கள் வணிகம், தொழில், நட்புறவு, ஆட்சிப் படையெடுப்பு போன்ற பல்வேறு நோக்கத்திற்காக புலம் பெயர்ந்துள்ளனர். பிற்காலச் சோழர்களின் முதலாம் ராஜேந்திரசோழன் படையெடுத்து மலாயாவில் உள்ள கெடா பகுதியினை கைப்பற்றி 'கடாரம் கொண்டான்' என்று பெயர் பெற்றான். 5ஆம் நூற்றாண்டுகளில் மலாயா, தென்கிழக்கு ஆசியா போன்ற பகுதிகளுக்கு வணிக நோக்கத்திற்காக தமிழர்கள் சென்றுள்ளனர். 7ஆம் நூற்றாண்டுகளில் பரமேஸ்வரா மன்னனின் ஆட்சி காலக் கட்டத்தில், மலாக்கா பட்டினத்திற்குத் தமிழர்கள் வணிகம்-தொழில் தொடர்பாக சென்றனர். 15ஆம் நூற்றாண்டு களில் செட்டியார் சமூகத்தினர் தென்கிழக்கு ஆசியாவின் பல பகுதிகளுக் குப் பண முதலீடு - வணிக நோக்கத்திற் காக சென்றுள்ளனர் என்பதை வரலாறு குறிப்பிடுகிறது. இறுதியாக 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் தோட்டப்புறங் களுக்காகவும் இன்னும் பல வேலை வாய்ப்புகளுக்காகவும் கூலி ஆட்களாக தமிழர்கள் பெருமளவு புலம்பெயர்ந்து வந்துள்ளனர். பல்வேறு காலகட்டங்களில் பல நாடுகளுக்கு பல்வேறு காரணங்களுக் காக தமிழர்கள் புலம்பெயர்ந்து வந்துள்ள னர். இப்படியாக பல நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் தங்களின் மொழி, சமயம், கலை பண்பாடு கலாச்சாரக் கூறுகளை விட்டுவிடாமல் இன்றும் கடைப்பிடித்து வருகிறார்கள் என்றால் அது மிகையாகாது. புலம்பெயர்ந்த தமிழர்கள், இன்றும் பல நாடுகளில் தங்களின் முன் பிறப்பின் குல வரலாற்றை எடுத்து காட்டும் வகையில், குலதெய்வ வழிபாட்டினை நடத்தி வருகின்றனர்.

பல்வேறு நாடுகளுக்குக் குடியேறிய தமிழர் கள், பல்வேறு இன, மொழி, சமயம் இருக்கின்ற நாடுகளில் சிறுபாண்மையின ராக சேர்ந்து வாழ்கின்ற நிலையில் இருக்கின்றனர். இவ்வாறு தமிழர், மொழி யையும் சமயத்தையும் ஒன்றுசேர் வெளி கொணர்ந்து தங்களது அடையாளத்தை 'முருக' வழிபாட்டின் மூலம் தாங்கள் வாழும் நாடுகளில் காட்டுகின்றனர். மலேசியா, சிங்கப்பூர் மொரிசியசு, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் காணப்படும் குன்றுகளின் மீது அமைந்து உள்ள அனைத்து முருகன் கோயில்களும் இதற்கு தக்க சான்றுகளாக உள்ளன.

## குறிஞ்சி நிலக் கடவுள் - முருகன்

பழந்தமிழ் நிலம் "நானிலம்" என வழங்கப் பட்டிருந்தது. அதிலே குறிஞ்சி நிலத்திற் குரிய தெய்வமாக 'முருகன்' போற்றப் பட்டிருக்கின்றான். மலைவாழ் மக்களுக்குப் பெரும் துன்பத்தை உண்டாக்கியது "இருள்" என்றும் அந்த இருளாகிய துன்பத்தை அகற்ற இளஞாயிறாகிய முருகனை வழி பட்டனர். "சேயோன் மேய மைவரை உலகமும்" என்ற தொல்காப்பியப் பாடலடி இதனை விளக்கி நிற்கின்றது.

சங்க இலக்கியத்தில் காட்டப்படுகின்ற திணைகளில் ஒன்றான குறிஞ்சி நிலத்தில் குடிக்கொண்டு இருக்கும், முருகனைக் குறிஞ்சி நிலக் கடவுளாகப் பார்க்கின்றனர். மலை மீது கோவில் கொண்டுள்ள முருகன் தமிழர்களின் இதயத்தில் நீங்காத இடம் கொண்டு நிலை பெற்ற கடவுளாகும். உலகில் பல இடங்களில் முருக வழிபாடு தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது. இலக்கியங்களில் வேலன் வெறியாட்டு என்பது மிகக் கூடுதலாகக் குறிக்கப் படுகிறது.

இயற்கை வழிபாட்டின் ஒரு கூறான சூரிய வணக்கமே பின்னர் முருக வழிபாடானது என்பர் சிலர். இதனைப் 'பரிபாடற்திறன்' எனும் நூலில் செவ்வேள் வணக்கம் பற்றி எழுதிய "சாரங்கபாணி" பின்வருமாறு விவரித்துள்ளார். "மாக்கடலினின்று நிவர்தெழுந்த இளஞாயிற்றின் இயற்கை அழகில் உள்ளந் தோய்ந்த அன்பர்கள் அதனையே இறையென வழிபட்டு வணங்கினர். அதுவே பின்னர் நீலமயில் மீது வீற்றிருக்கும் செவ்வேள் வழிபாடாக மலர்ந்தது".

முருகனுக்கும் தமிழர்களுக்கும் இருக்கக் கூடிய தொடர்பு என்பது வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டதாகும். முருக வழிபாடு என்பது அத்தகைய தொன்மை மிக்கது. தமிழர்களின் பண்பாட்டோடும் மொழியோடும் தத்துவத்தோடும் பழக்க வழக்கங்களோடும் இம்முருக வழிபாடு

பின்னிப் பிணைந்திருக்கிறது. இதன் சுவடுகளை சங்ககால இலக்கியங்களான திருமுருகாற்றுப்படை, பரிபாடல் எனப் பலவற்றில் காணமுடியும்.

### முருகன் என்றால் தமிழ்

'முருகன் என்றால் அழகு என்று பொருள் படும். முருகன் என்றாலே அது தமிழ்மொழி தான் என்று காலந்தோறும் வணங்கி வருகின்றனர். அவ்வையார், நக்கீரர், அருணகிரிநாதர் போன்ற அருளாளர்களின் தமிழ்ப்பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தவர் முருகன். அதனால், அவர் தமிழ்க்கடவுள் என்றும் போற்றப்படுகிறார். தமிழ்மொழிக் குக் கடவுளான ஆறுமுகனுக்கு விழிகளோ பன்னிரண்டு. தமிழின் உயிரெழுத்துக்களும் பன்னிரண்டு! முக்கண் சிவனின் மைந்தனுக்கு மூவாறு கண்கள். முத்தமிழ் மொழியின் மெய்யெழுத்துக்களும் மூவாறு (பதினெட்டு) அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவாறாய் பகுக்கப்பட்டுள்ளன. முருகன் கை வேலாயுதம் ஒன்றே போல் தமிழில் ஒரே ஒரு ஆய்த எழுத்தும் உண்டு. பிற மொழி எதிலும் இல்லாத சிறப்பெழுத்து. முருக வழிபாடு தமிழ் மக்களிடையே காணப் படுகிற மிகத்தொன்மையான வழிபாடாகும். குறிப்பாக, காவடி எடுத்தல், பாற்குடம் எடுத்தல், தலைமுடி இறக்குதல் போன்ற நேர்த்திக்கடன்களை முருகனுக்கு உரிய வழிப்பாடாகக் கருதி, ஆண்டுத்தோறும் வருகின்ற சுபதினங்களில் கொண்டாடி மகிழ்கின்றனர். தமிழர்கள் வாழ்கின்ற பல நாடுகளிலும் தமிழ்மொழி பேச்சு வழக்கில் இல்லையென்றாலும் முருக பெருமானின் தரிசனமும் முருக பக்திப் பாமாலையைப் பாடுவதுமே தமிழ்மொழியெனக் கருதி வருகின்றனர். இவர்கள் 'முருகன்' என்றால் தமிழ் அல்லது தமிழ் என்றாலே முருகன் தான் என்று தங்களின் இனத்தை அடையாளம் காட்டுகின்றனர்.

### குடியேறிய ஊர்களில் குன்றுமேல் அமர்ந்த குமரன்.

### மலேசியா பத்துமலையில் முருகன்

மலைப் பகுதிகளில் இருக்கின்ற முருகனைக் குறிஞ்சி நிலக் கடவுள் என்று தமிழ் இலக்கியம் கூறுவது போல, மலேசியாவில் மலைகள் மேல் அல்லது மலையைச் சார்ந்த பகுதிகளில் முருகன் கோவில் அமையப் பெற்றுள்ளது.

அதற்கு சான்றாக பத்துமலை முருகன் கோவிலைக் கூறலாம். 1891ஆம் ஆண்டு திரு. தம்புசாமிப் பிள்ளை அவர்கள் இக்கோவிலைத் தோற்றுவித்தார். இந்த மலையடிவாரத்தில் ஒரு வேல் இருப்பதைக் கண்டு, இந்த மலையின் மத்தியில், குகையின் உள் ஸ்ரீ சுப்ரமணியர் சிலையை நிலைநாட்டினார். 1892 முதல் பத்துமலை முருகனுக்குத் தைப்பூச விழா தொடங்கப் பட்டது. குகைக்குச் செல்லும் பாதை கற்களும் பாறைகளும் நிறைந்த கரடு முரடான ஒத்தையடிப் பாதையாக இருந்ததால், 1920இல் மலையேறி, குகைக் கோயிலுக்குச் செல்ல மரக் கட்டைகளி லான 272 படிக்கட்டுகள் கட்டப்பட்டன. இவ்வாறு படிப்படியாக பல பரிணாம வளர்ச்சிக் கண்டு, மலேசியாவிலும் மட்டுமல்லாமல் இன்று உலகத்திற்கே ஒரு தலைச்சிறந்த சுற்றுலா தளமாக உருவாகி உள்ளது. இத்தளத்தின் முத்திப்பாய், 2006ஆம் ஆண்டில் 140 அடி உயரத்தில் முருகனின் திருவுருவச் சிலை ஒன்று, பெரியவர் டான்ஸ்ரீ ஆர்.நடராஜா அவர்களின் தலைமையில் நிறுவப்பட்டது. இச்சிலை அமைக்கப்பட்ட காலத்தில் உலகின் உயரமான முருகன் சிலையாக திகழ்ந்தது. முருகனின் ஆறுபடை வீடுகளைப் போன்று பத்துமலையில் முருகன் எழுந்தருளியிருப் பது இதன் சிறப்பு. பத்துமலை முருகன் கோவிலில் நடைபெறும் தைப்பூசத் திருநாளில் சராசரியாக ஒரு ஆண்டிற்கு 5 லட்சம் மக்கள் கலந்து கொள்கின்றனர். மலேசிய தமிழர்களின் சிறப்பு திருவிழா நாள் என்றால் அது தைப்பூசமாகத் தான் இருக்கும். தைப்பூசத்தன்று மக்கள் பால்குடம் எடுப்பது காவடி எடுப்பது விரதம் இருந்து அழகு குத்திக் கொள்வது போன்ற இன்னும் பல முருக வழிபாடு களை இன்றளவும் தவறாமல் செய்து வருகின்றனர். இதன் மூலம் தமிழ், தமிழர் என்ற உணர்விற்கு பொருள் தருவதாக உருவாகியுள்ளது இந்த முருக வழிபாடு. பத்துமலை அடிவாரத்தில் அமைய பெற்ற கம்பீரமான முருகனின் திருவுருவச்

சிலையானது உலக அரங்கில் மலேசியாவை அடையாளம் காட்டுகிறது. இந்த 140 அடி உயர சிலை, மலேசியா வில் கொண்டாடப்படும் முருகன்-தைப்பூச இந்து பெரும் விழா கொண்டாடப்படும் இடம் என்று காட்டுவதோடு உலகின் பல இடங்களிலிருந்து தமிழர்கள் ஒன்றுக்கூடி தமிழர்-சமயம் சார்ந்த தமிழுணர்வை வெளிகாட்டுமிடமாகத் திகழ்கின்றது.

**பினாங்கு தண்ணீர்மலையில் பாலதண்டாயுதபாணி.**

**அருள்மிகு பாலதண்டாயுதபாணி கோவில்,**

மலேசியாவில் மலையில் அமையப் பெற்ற மற்றொரு குறிஞ்சி நிலக் கடவுள், பினாங்கு அருள்மிகு பாலதண்டாயுதபாணி கோவில். இக்கோவில் "அருவி மலை கோயில்" அல்லது "தண்ணீர் மலை கோயில்" என உள்ளூர் மக்களால் அறியப்படும் ஜார்ஜ் டவுன், பினாங்கில் அமைந்துள்ளது. மலேசியா தென்பகுதியில் இருக்கின்ற இந்த மலைக் கோவில் 513 படிக்கட்டுகளை உடையது. இது பத்து மலைக்கு அடுத்த படியாக, மலேசியாவில் தைப்பூசத்திற்கு பிரசித்தி பெற்ற கோவில் ஆகும். 21.6 மீ உயரம் கொண்ட கோபுரம் (பிரதான கோபுரம்) கொண்ட இந்த மலை உச்சியில் உள்ள கோயில், இந்தியாவிற்கு வெளியே உள்ள மிகப்பெரிய முருகன் கோவிலாக விளங்குகிறது. இக்கோவிலில் தைப்பூச விழா 3 நாட்களுக்கு நடைபெறும். தங்க இரதம், வெள்ளி இரதம் என இரண்டு இரதங்கள் பவணி வரும். பல்வேறு வகையான வழிபாடுகள், காவடி எடுத்தல், அலகு குத்துதல், பால்குடம் எடுத்தல், முடி இறக்குதல் மற்றும் பாத யாத்திரை போன்ற நேர்த்திக் கடன்களைப் பக்தர்கள் நிறைவேற்றுவார்கள். வடக்குத் திசை, மலையில் அமைந்துள்ள முருக கடவுளின் தைப்பூச விழாவானது, முற்றிலும் தமிழ் மணக்கும் தமிழர் விழாவாகவே காட்சியளிக்கும்.

**ஈப்போ- கல்லுமலை முருகன்**

**அருள்மிகு ஸ்ரீ சுப்ரமணியர் ஆலயம்**

அருள்மிகு ஸ்ரீசுப்ரமணியர் கல்லுமலை ஆலயம் ஈப்போ, குனோங் சீரோ, மலை அடிவாரத்தில் இருக்கின்றது. 1889ஆம் ஆண்டில் கல் உடைக்கும் தொழிலாளிக ளால் இவ்வாலயம் அமையப் பெற்றது. மலையின் குகையில் இருக்கின்ற இந்த முருகன் கோவிலில் தைப்பூச விழா மிக விமர்சையாக கொண்டாடப் படுகிறது. ஐயாயிரம் பக்தர்களுக்கு மேல் கலந்து கொள்ளும் இவ்விழாவில் நகர்புற இரத ஊர்வலம், காவடி எடுத்தல், அலகு குத்துதல், பால்குடம் எடுத்தல், முடி இறக்குதல், முருகன் பாமாலை பாடுதல், அன்னதானம் வழங்குதல் போன்ற சமய நிகழ்ச்சிகள் நடைபெறும். மலையடிவாரத் தில் வீற்றிருக்கும் முருகனுக்கு நடைபெறும் இரண்டு நாட்கள் தைப்பூச விழா, இப்பகுதித் தமிழர்கள் ஒன்றிணையும் நாளாகவும் தமிழர் சமயப் பெருவிழாவாக வும் காட்சியளிக்கும்.

**மொரிசியஸ் குன்றின் மேல் அமர்ந்த தமிழ்க் கடவுள்**

**முருகன் மலைக் கோவில், காட் போர்னஸ் (Quatre Bornes)**

மொரிசியஸ் நாட்டில் ஏறக்குறைய 30க்கும் மேற்பட்ட முருகன் கோவில்கள் இருக்கின்றன. அவற்றுள் முருகனுக்குப் பெரிய கோவிலாக இருப்பது காட்போர் னஸ் மலையில் குடிக்கொண்டுள்ள முருகன் மலைக் கோவில். 1897யில் கட்டப்பட்டக் கோவில் என்று தகவல் காட்டுகிறது. படிகளில் ஏறி முருகனைக் காணச் செல்லுதல், கல்யாண மண்டபம் இதர சமய மையங்களும் அமையப்பெற்றிருக்கும் இக்கோவில், பழனிமலை முருகனை மலையேறி வணங்குவதுப் போல் காட்சியளிக்கும். வேலன் குடிகொண்ட இந்த மலைக்கோவில் மொரீஷியஸ் தமிழர் களின் படைவீடாகவும் கருதப்படுகின்றது. இக்கோவிலில் சித்திரைக் காவடி விழா மிகச் சிறப்பாக நடைபெறும். ஆயிரக்க ணக்கான பக்தர்கள் திருவிழா அன்று கூடுவார்கள். வீதிகள் தோறும் காவடிச் சிந்து, முருகன் பாமாலை, வேல் வேல், அரோகரா போன்ற ஓசைகள் ஒலித்த வண்ணமாகவே இருக்கும். மொரிசியஸ் தமிழர்கள் கொண்டாடும் இந்த உன்னத மான ‘முருகன் விழா’ எதைக் காட்டுகிறது

என்றால், வேலன் தமிழரின் கடவுள், அப்பெருமானுக் குத் தனித்துவதோடு தமிழிலே செலுத்து கின்ற காணிக்கை, பக்தி மார்க்கம் அனைத்தும் எங்கள் மொழி இனத்திற்கே சார்ந்தது. அதாவது தமிழ் மொழிக்கே என்று உணர்த்துகிறது.

### மோரோஸ் முருகன் மலைக்கோவில், ஸ்தன்லே (Mont Rosches, Beau-Bassin)

மோரோஸ் முருகன் மலைக்கோவில், தீவின் மையப் பகுதியின் ஒரு மலையை ஒட்டி அமைந்துள்ள கோவில். 19ஆம் நூற்றாண்டு கால வாக்கில் இப்பகுதி வாழ் மக்களால் கட்டப்பட்டக் கோவில் இது. இங்கு சித்திரைக் காவடி விழா மிக சிறப்பாக நடைபெறும். நூற்றுக்கணக்கான பக்தப் பெருமக்கள் கூடுவார்கள். முருக பக்திப் பாடல்கள், காவடி எடுத்தல், பால்குடம் எடுத்தல், சிறப்பு பூஜைகள், கூட்டுப் பிரார்த்தனை, அன்னதானம் போன்றவைகள் சிறப்பாக நடைப்பெறும். ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண்ணைக் கவரும் வகையில் அழகுவாய்ந்த காவடிகளை யும் பால்குடங்களையும் எடுத்து வருவர், முருகன் தமிழ்ப் பாமலை பாடல்கள் பாடுவார்கள், பெண்கள் தமிழ் பாடலுக்குக் கும்மி நடனம் ஆடுவார்கள். இந்த முருகனின் சித்திரை விழாவானது முத்தமிழ் விழாவாகக் காட்சியளிக்கும்

### தென் ஆப்பிரிக்கா டர்பன் மற்றும் ரீயூனியன் தீவில் முருக வழிபாடு

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பாக தென்னாப்பிரிக்கா நாடுகளுக்கு வணிகம் மற்றும் வேலை வாய்ப்பிற்காக தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். இந்த கால சூழ்நிலையில் தமிழும், முருக வழிபாடும் ஆப்பிரிக்கா கண்டத்தை அடைந்தது. 1970களில் தென் ஆப்ரிக்கா, டர்பன் பீனிக்ஸ் பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் வாழும் மலைப்பகுதியில் ஒரு சிறிய அளவிலான முருகன் கோயிலைக் கட்டி வழிபட்டு வந்துள்ளனர். பின் நாட்களில் கோயில் புதுப்பிக்கப்பட்டு மலேசியா பத்துமலை முருகனின் மாதிரியாக 8.1 அடி உயரம் உள்ள முருகன் சிலை நிறுவினர். இதனைப் போன்றே 1900ல் யூனியன் தீவில் சிவசுப்பிரமணியன் கோயில் ஒன்று கட்டப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆப்ரிக்காவில் உள்ள தமிழர்கள் வைகாசி விசாகம் மற்றும் பங்குனி உத்திரம் ஆகிய திருவிழாக்களைச் சிறப்பாக கொண்டாடு கின்றனர். இந்த நாட்களில் பால் குடம் மற்றும் காவடி எடுப்பது, அலகு குத்திக் கொள்வது, தேர் இழுப்பது போன்ற முருக வழிபாடுகளை செய்கின்றனர். இவ்வாறாக, தமிழர்கள் சென்ற இடமெல்லாம் குன்றுகள் தோறும் குறிஞ்சித் தலைவனாம் முருகனுக் குக் கோயில் கட்டி வழிபட்டுள்ளனர். இப்படியாகத் தமிழ் மக்கள் தமிழ் வளர்த்த இடங்களில் எல்லாம் முருக வழிபாட்டையும் வளர்த்து உள்ளனர்.

### முடிவுரை

பன்நெடுங்காலம் தொட்டே தமிழர்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்கு வணிகம், வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு காரணங்களுக்காக புலம்பெயர்ந்து சென்றுள்ளனர். அப்படி தமிழன் சென்ற எல்லா இடங்களிலும் தமிழ் மொழியையும் அவன் வாழ்வியல் முறைகளையும், பண்பாடு, கலாச்சரம், சமயம் போன்றவற்றையும் போற்றி பாதுகாத்து வருகின்றான். மொரிசியஸ் தென்னாப்பி ரிக்கா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் இடையே தமிழ் மொழியில் பேச்சுவழக்கில் இல்லாமல் வழக்கொழிந்து போய் விட்டது. ஆனாலும் தங்களின் பண்பாடு கலாச்சாரத்தினூடாய் கலந்த முருக வழிபாட்டின் இன்றளவும் கடை பிடித்து வருகின்றனர். குறிப்பாக தைப்பூசத் திருநாளன்று தமிழ் தெரியாத தமிழர்கள் கூட கந்த சஷ்டி பாடி முருக வழிபாட்டை வெகு விமரிசையாக கொண்டாடி வருகின்றனர். முருக வழிபாடு என்பது தமிழ் மொழியின் மற்றொரு முகமாகவேப் பார்க்கப் படுகிறது. தமிழ் தெரியாத தமிழர்கள் கூட முருக வழிபாட்டின் மூலம் தமிழராய் ஒன்றிணைந்து நிற்கின்றனர். எல்லோரும் இந்துக்கள் என்ற ஒரு குடையின் கீழ் வந்தாலும் இந்த முருக வழிபாடு தங்களைத் தமிழராய் பிரித்து காட்டுகிறது என்று கர்வம் கொள்கின்றனர்.

மலேசியா, ஆஸ்திரேலியா, கனடா போன்ற மற்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் இடையே தமிழ்மொழி இன்றும் உயிர்ப்புடன் இருக்கிறது. தமிழ் வாழும் எல்லா இடங்களிலும் முருக வழிபாடும் இயங்கி வருகிறது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தி. இத்தகைய தமிழின் மறுமுகமாகவே முருக வழிபாடு மாறியுள்ளது. குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள ஆறுபடை வீடுகளுக்கு பின்பு முருகன் கோயில் என்றாலே உலக மக்கள் அனைவருக்கும் நினைவில் வருவது மலேசியா, பத்து மலை முருகன் கோயில் என்றால் அது மிகையா காது. முருக பக்தர்கள் அனைவருக்கும் இருக்கும் ஒரே ஆசை வாழ்வின் ஒரு முறையாவது பத்து மலை முருகனைக் காணவேண்டும் என்பது அவர்களினூடே இயல்பாகவே ஒட்டி உள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த முருக வழிபாடு இன்று மட்டுமல்ல சங்க காலம் தொட்டே தமிழ் மக்களின் வாழ்வியல் முறையோடு பிரிக்க முடியாத அளவிற்கு பின்னிப் பிணைந்து உள்ளது. புலம்பெயர்ந்த அனைத்து தமிழ் மக்களும் தங்கள் வாழும் நாடுகளில் பொங்கல் மற்றும் தீபாவளித் திருநாளைப் போன்று தைப்பூசத் திருநாளை வெகு சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். அதிலும் குறிப்பாக சில நாடுகளில் தைப்பூசம் என்பது தமிழர்களின் அடையாளமாக அங்கீகரிக்கப்பட்டு அரசு விடுமுறையாகவே அறிவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. முருக வழிபாடு என்பது வெறும் வழிபாடாக மற்றும் நின்றுவிடாமல் தமிழர் களின் வாழ்வியல் முறை, கலாச்சாரம், கலை, பண்பாடு ஆகியவற்றை வளர்ப்பதி லும் அதனை அடுத்த தலைமுறையின ருக்கு கடத்துவதிலும் முக்கிய பங்காற்றி வருகிறது. இதோடு நின்று விடாமல் ஏதோ ஒரு வகையில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் தமிழர் என்ற உணர்விற்கும் அடிநாதமாகவே இந்த முருக வழிபாடு அமைந்து விட்டது என்று கூறினால் அது மிகையாகாது.

## References


1. புலம்பெயர் நாடுகளில் - தமிழ் கலாச்சாரம் மற்றும் கலைகள் - ச.செல்வகுமாரன் (2020)
2. Clothey, Fred W. (1978). The Many Faces of Murukan: The History and Meaning of a South Indian God. Walter de Gruyter.
3. Ramanujan, S R (2014). The Lord of Vengadam A Historical Perspective. Partridge Publishing.
4. Meenakshi, K. (1997). Tolkappiyam and Astadhyayi. International Institute of Tamil Studies.
5. In Diaspora Countries - Tamil Culture and Arts- S. Selvakumaran (2020)
6. Bhagwatsala Bharathi, (2016) Cultural anthropology, (Revised Edition) Meiyappan Pathipagam, Chidambaram
7. Balasubrahmanyam, S. R. (1966). Early Chola Art Part 1. New Asia Publishing House.
8. Subramanian, A. (1978). New Dimensions in the Study of Tamil Culture.
9. Zvelebil, Kamil (1973). The Smile of Murugan: On Tamil Literature of South India. BRILL Academic
10. Web Links : https://ta.wikipedia.org/wiki
11. https://en.wikipedia.org/wiki/Batu_Caves_Murugan_Statue